[1972 ஆகஸ்டு 9

கோடம்பாக்கம் புதூருக்கு வசதிகள்

* 21. வினா—திரு. நா. வெ. குருசாமி: மாண்புமிகு பின்தங்கிய வகுப்பினர் நல அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னை கோடம்பாக்கம் புதூர் (Part II) பிரிவில் (கலைஞர் கருணாநிதி நகர்) சென்னை வீட்டுவசதி வாரியத்தில் ஒதுக்கப்பட்ட மனைகளில் வீடுகட்டி குடியிருப்போர்களுக்கு ஒரு வருடத்திற்கு மேலாகியும், குடிதண்ணீர், மின்சாரம் போன்ற வசதிகள் செய்து தராமல் இருப்பது உண்மையா?

(இ) ஆம் எனில், அதன் பேரில் அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. க. இராசாராம்: (அ) & (இ) சென்னை கோடம்பாக்கம் புதூர் (Part II) பிரிவில் (கலைஞர் கருணாநிதி நகர்) வசிக்கும் சுமார் 300 குடும்பங்களுக்கு தற்போது குடிநீர் அளிக்கப்பட்டு வருகிறது. இந்தப் பகுதியில் அதிகப்படியான நில நீர் ஊற்றுக்கள் இல்லையாதலால் விருகம்பாக்கம் போரூர் ஏரிக்கரைப் பகுதியில் உள்ள நில-நீர் ஊற்றுக்களிலிருந்து தூய்மையான குடிநீர் இந்நகரில் வசிப்பவர்கள் எல்லோருக்கும் கூடிய விரைவில் அளிக்க ஏற்பாடு செய்யப்பட்டு வருகிறது. மின் வசதி அளிப்பதற்கான ஏற்பாடுகளை மின்சார வாரியம் செய்து வருகின்றது. இன்னும் மூன்று அல்லது நான்கு மாதத்திற்குள் எல்லா வீடுகளுக்கும் மின்வசதி கிடைக்கக்கூடும்.

நகராட்சிகளும், பேருந்துப் போக்குவரத்தும்

* 22 வினா—திரு. என். கிட்டப்பா: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா—

தமிழகத்தில் எந்தெந்த நகராட்சிகள் டவுன் பஸ் விட வேண்டுவதற்கான அனுமதி கோரி அரசிடம் விண்ணப்பித்துள்ளன?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: விண்ணப்பம் ஏதும் முடிவுறு நிலையில் இல்லை. நகரப் பேருந்துப் பணிகளை நடத்த நகராட்சிகளுக்கு அனுமதி வழங்குவதில்லையென்பது அரசின் கொள்கையாகும்.

சென்னை—நாகப்பட்டினம் வழித்தடத்தில் இரவு நேரப் பேருந்து

* 23. வினா—திரு. எஸ். கணேசன்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா—

சென்னை—நாகப்பட்டினம் பேருந்து தடத்தில் இரவு நேர துரித வண்டி (Express) விடும் நோக்கம் அரசுக்கு உள்ளதா?